

# கரங்கள்... மரங்கள்... வரங்கள்...!



“என் சொந்த கிராமம் தூத்துக்குடி மாவட்டம், புடிய முத்தூர். நான்கைந்து ஆண்டு களுக்கு முன்பு 'கல்கி'யில் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த தங்கசாமி தன் பத்து ஏக்கரில் மரங்களாகவே வைத்து வளர்த்து வருவதாக ஒரு கட்டுரை படித்தேன். என்னுடைய பத்து செண்ட் நிலத்தில் நாம் ஏன் மரம் வைத்து வளர்க்கக் கூடாது? எனத் தோன்றியது. ஈஷாவின் பசுமைக் கரங்கள் அமைப்பு எனக்கு வழிகாட்டியது. இப்போது பத்து செண்ட் நிலத்திலும் மரம் நட்டு வளர்த்து வருகிறேன். என் கிராமத்தையே பசுமை கிராமமாக மாற்ற வேண்டி, கிராம மக்கள் அனைவரிடமும் பேசி விழிப்புணர்வு பிரசாரம் செய்கிறேன். 2010, ஜூனிலிருந்து இருபதாயிரம் மரக்கன்றுகள் நட்டு வளர்ப்பது தான் என் இலக்கு!” என்கிறார் வேனில் சுதாகர்.

மூன்று ஏக்கர் நிலத்தில் ஆயிரத்தை நூறு வன மரங்களும், நூறு பழ மரங்களும் வைத்து வளர்த்து வரும் வடசித்தூர் சோலையப்ப கவுண்டருக்கு வயது அறுபத்தைந்து. “மரங்கள் வளர்ப்பதால்தான் இருபத்தைந்து வயது இளைஞனாக வலம் வருகிறேன். இதற்குக் காரணம் ஈஷாவின் பசுமைக் கரங்கள்தான்” என்கிறார்!

தமிழகத்தின் பசுமைப் பரப்பை 33 சதவிகிதமாக அதிகரிக்கும் நோக்கத்தோடு, ஈஷாவின் பசுமைக் கரங்கள் அமைப்பு இயங்கி வருகிறது. 2005லிருந்து இதன் மூலம், சமீபகாலம் வரைக்குமாக சுமார் ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதற்கு இருபத்தைந்து லட்சம் மக்களின் கரங்கள் இணைந்துள்ளன. மொத்தம் 11.4 கோடி மரக்கன்றுகள் நட்டு, வளர்க்கப்பட வேண்டும் என்பது இலக்கு. 2006ல் தமிழகத்தில் 27 மாவட்டங்களில் 6284 இடங்களில் 2,52,000 தன்னார்வத் தொண்டர்களின் கரங்களினால், 8,52,587 மரங்கள் தொடர்ந்து ஒரேநாளில் நடப்பட்டுள்ளன. இது உலக சாதனை என்று குறிப்பிடுகிறது பசுமை மரங்கள் அமைப்பு. இன்னமும் செய்ய வேண்டியவை பற்றி நினைக்கும்போது, 'இது வரை செய்தது சமுத்திரத்தின் ஒரு துளி போலத்தான்!' என்பது சத்குருவின் வாக்கு என்கிறார் இதன் ஆர்வலர் ஒருவர்.




- இருள்நீக்கியான்